# மாநகர அடுக்குமாடி வீடுகளில்

# ஆபத்து - அபாய மணி முறையாக செயல்படுவது உறுதி செய்யப்படும்

கோலாலம்பூர், பிப். 14-
மாநகர அடுக்குமாடிகளில் தீயணைப்பு அபாய மணியும் அதன் வசதிகளும் முறையாக செயல்படுவதை அதிகாரிகள் உறுதி செய்வர் என்று பிரதமர் துறை அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா தெரிவித்தார்.

வீடமைப்பு ஊராட்சித் துறை அமைச்சும் தீயணைப்பு துறையும் இது தொடர்பில் கூட்டாக செயல்படும் என்றார் அவர். அடுக்குமாடிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய இது மிகவும் அவசியமாகிறது.



ஒவ்வொரு முறையும் அமைச்சின் அதிகாரிகளும் தீயணைப்பு அதிகாரிகளும் அந்த வீடுகளில் தீயணைப்பு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றார் அவர்.

நேற்று இங்கு எஸ்கே ஸ்ரீ செராஸில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்கியிருக்கும் தற்காலிக நிவாரண மையத்தில் மக்களை பார்வையிட்டு அவர்களுக்கு ஆறுதல் சொன்ன பிறகு அவர் பேசினார். மேலும் தீயினால் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

ஸ்ரீ ஜொகூர், பிபிஆர் அடுக்குமாடியில் இவர்களுக்கான தற்காலிக வீடுகள் தயாராக இருக்கின்றன. 6 மாதங்களுக்கு அவர்கள் இந்த வீடுகளில் தங்கியிருக்க கேட்டுக் கொள்ளப்படுவர்.

அந்த வீட்டின் உள்வசதிகளை அவர்களே மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர். அண்மையில் ஸ்ரீ சபா அடுக்குமாடியில் நடந்த தீ விபத்தில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் வீடுகளை இழந்தனர்.